சென்னை 01.03.2025 திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் சிறப்பிதழ் - 2025 9

# 'திராவிட மாடல்' அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய திட்டங்கள் - இந்தியாவிற்கே முன்னோடித் திட்டங்கள்!

**திராவிட வழித் தோன்றல், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் இன்றைக்கு தமிழ்நாட்டை வழி நடத்திக் கொண்டிருக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் இன்று !**

**இளம் வயதில் தொடங்கி இன்று வரையில் மக்கள் பணியில் தொய்வில்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கும் இந்தியாவிலேயே ஒரு தலைவர் என்றால் அது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான்!**

**ஒவ்வொரு வினாடியும் நாட்டுக்காக, மக்களுக்காகவே திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வரும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சாதனை பட்டியலை தொகுத்தால் ஏடு காணாது. பிரமிப்பாக இருக்கும்!**

**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத் தொடர்ந்து தி.மு.க. அரசின் முதலமைச்சராக 2021 ஆம் ஆண்டு மே 7 ஆம் தேதி அன்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய நான்... என்று உறுதி மொழி ஏற்று முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனே முத்தான ஐந்து கையெழுத்துக்களையிட்டு, சாதனையைத் தொடங்கினார். அந்தச் சாதனைப் பட்டியல் தொடருகிறது, தொடருகிறது, தொடர்ந்து கொண்டே இருக்கிறது.**

**அவரது சாதனைப் பட்டியல்களில் இங்கே சிலவற்றை தொகுத்தளித்திருக்கிறோம்.**

**மே - 7, 2021 -** கொரோனா நிவாரண நிதியாக ரூபாய் 4000 உதவித் தொகை.

ஆவின் பால்விலை லிட்டருக்கு ரூ. 3 குறைப்பு

அரசுப் போக்குவரத்து பேருந்துகளில் மகளிர் இலவச பயணம்.

100 நாட்களில் தீர்வு காண உங்கள் தொகுதியில் முதலமைச்சர்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களுக்கு அதற்கான கட்டணத்தை தமிழக அரசே காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்கும் என்று முத்தான 5 திட்டங்களுக்கு முதல் கையெழுத்திட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின். அவரது கையெழுத்தால் மேலும் தொடர்ந்து நிறைவேற்றிய திட்டங்கள்...

அரிசி குடும்ப அட்டைதராரர்கள் அனைவருக்கும் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு.

திருக்கோவில்களில் மாதச் சம்பளமின்றி பணி யாற்றி வரும் பணியாளர்களுக்கு கொரோனா நிவாரண நிதியுதவி ரூ.4000 மற்றும் 10 கிலோ அரிசி யுடன் 15 வகையான மளிகைப் பொருட்கள்.

திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை.

மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ரூ.4000 கொரோனா நிவாரண உதவித் தொகை.

வன்னியர்கள், சீர்மரபினர் மற்றும் இதர மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சிறப்பு ஒதுக்கீடு வழங்கி அரசாணை வெளியீடு.



நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்திர நிதி உதவி ரூ,3000 ஆக உயர்வு.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும், முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு விழாவில் 49 திட்டங்களின் மூலம், 28,508 கோடி முதலீட்டில், 83,482 பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் புதிய தொழில் நிறுவனங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், முதல்வர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தாயின.

தமிழக சட்டப் பேரவையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களை திறக்க வைத்து கலைஞர் அவர்களுக்கு பெருமைச் சேர்த்தார் தமிழக முதல்வர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொலை நோக்குத் திட்டமான 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற உன்னதத் திட்டத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாமன்னர் ராஜேந்திர சோழன் தமிழர்களுக்கே பெருமை சேர்க்கும் வகையில் தமிழர்களின் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலைக் கட்டினார். அவரது பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று அறிவித்தார் முதல்வர்.

முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு. கழகம் ஆட்சி அமைந்து, முதல் பட்ஜெட் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப் பட்டது.

கழக தேர்தல் அறிக்கையில் வேளாண் துறைக்கென்று தனியாக பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்ததை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றினார்.

## காலை உணவுத் திட்டம்!

**மதுரை நெல்பேட்டையில்15.9.2022 அன்று அரசு பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து சிறார்களின் பசிப் பிணியை போக்கி வருகிறார் முதல்வர்!**

தமிழினத்தின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் தகைசால் தமிழர் விருது.

தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்துச் சிறப்பிக்கும் வகையில் இலக்கிய மாமணி விருது.

ஞானபீடம், சாகித்ய அகாடமி மற்றும் மாநில உலகளாவிய அமைப்புகளின் இலக்கிய விருதுகள் பெற்றவர்களுக்கு அரசு வீடு.

அரசு பள்ளிகளிலும் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை.

இந்துச் சமய அறநிலையத் துறை திருக்கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை.

தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17 ஆம் நாளை ஆண்டுதோறும் சமூக நீதி நாளாகக் கொண்டாடுவோம்.

பெரும் புலவர் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமையைப் போற்றும் வகையில் செப்டம்பர் 11 மகாகவி நாள்" கடைப்பிடிக்கப்படும்.

தமிழக காவலர்களுக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்படும்.

பெண் காவலர்கள் வி.ஐ.பி.க்கள் வருகையின் போது சாலையில் பாதுகாப்பு பணியில் நிற்பதில் இருந்து விதிவிலக்கு.

தன்னாட்சி அதிகாரத்துடன் தமிழ் நாடு ஆதி திராவிடர் பழங்குடியினர் நல ஆணையம்.

திருநெல்வேலியில் தமிழனின் பெருமையை விளக்கும் வயைில் ரூ 15 கோடியில் பொருநை அருங்காட்சியகம்.

ஏழை எளியோர் வாழும் இடத்திலேயே சிறப்பு மருத்துவச் சேவை அளிக்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் தொடக்கம்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ36.52 கோடியில் பேட்டரியில் இயங்கும் 1684 மூன்று சக்கர வாகனங்கள் வழங்கல்.

இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம்.

மக்களைத் தேடி மருத்துவ மையம் இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவ மனையில் அறிமுகம்.

## டங்ஸ்டன் திட்டம் ரத்து!

**மதுரை மாவட்டம் அரிட்டாபட்டியில் ஒன்றிய அரசால் அமைக்கப்படவிருக்கும் டங்ஸ்டன் தொழிற்சாலையை ரத்து செய்ய வேண்டும் என்று பேரவையில் முதல்வர் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி கடும் கண்டனம் தெரிவித்ததால் டங்ஸ்டன் திட்டத்தை ரத்து செய்தது ஒன்றிய அரசு!**

அக்டோபர் 5 அருட்பிரகாச வள்ளலார் பிறந்த தினம். தனிப்பெருங்கருணை நாள் என அறிவிப்பு.

வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க புலம் பெயர் தமிழர் நல வாரியம் அறிவிப்பு.

திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி உள்ளிட்ட பல்வேறு திருக்கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் தொடக்கம்.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தொழிற்கல்விகளில் 7.5. சதவிகித இடஒதுக்கீடு படிப்பு செலவு முழுமையும் அரசே ஏற்கும் என்ற அறிவிப்பு.

நான் முதல்வன் திட்டத்தின் மாபெரும் திறன் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இணையத் தளமும் தொடக்கம்.

பொதுமக்களுக்கு அரசுப் பணிகள் விரைவாகவும் எளிதாகவும் சென்றடையும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடக்கம்.

மதுரை நெல்பேட்டையில் உள்ள ஆதி மூலம் மாநகராட்சி பள்ளியில் சிறார்களுக்கு காலை உணவுத் திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்தார்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது.

மாணவர்களை நல்வழிப்படுத்தும் 'சிற்பி' திட்டம் தொடக்கம்.

குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து வழங்கும் திட்டம்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்!

தமிழ்நாடு அரசுப் பணிகளில் சேர தமிழில் தேர்ச்சி கட்டாயம். மசோதா தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றம்.

ஒடிசாவில் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஒடிசா மாநில விளையாட்டுத் துறை அமைச்சக அதிகாரிகளுடன் உலகத்தரம் வாய்ந்த வகையில் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிப்பது உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு மேம்பாட்டு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

மின்சார வாகன உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாநில திருத்தப்பட்ட மின் வாகனக் கொள்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். இதன்மூலம் ரூ.50,000 கோடி முதலீட்டை ஈர்த்து 1.5 லட்சம் வேலை வாய்ப்பை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏற்றமிகு சிறப்புத் திட்டங்கள் எனும் பெயரில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்குவது, காலை உணவுத் திட்டம் விரிவாக்கம், திருநங்கைகளுக்கு ஒய்வூதியம் அதிகரிப்பு உள்ளிட்ட ஏழு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் ஸ்டேடியத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கலைஞர் மு.கருணாநிதி மாடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

கீழடியில் 2 ஏக்கர் பரப்பளவில் ரூ.18.43 கோடி செலவில் பிரமாண்டமாக கட்டப்பட்ட தொல்பொருள் அருங்காட்சியகத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு மகளிர் காவல்துறையின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு 'அவள்' திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் பெண் காவலர்களின் சூழ்நிலைக்கேற்ப விடுப்பு வழங்குவது உள்ளிட்ட 9 திட்டங்களை அறிவித்தார்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராம ஊராட்சிகள் கணினி மயமாக்கப்பட்டதை தொடர்ந்து, வீட்டு வரி, சொத்துவரிகளை ஆன்லைனில் செலுத்தும் வசதி அமலானது.

அரசுப் பேருந்துகளில் 5 வயது வரை யிலான குழந்தைகளுக்கு பயணச் சீட்டு கட்டணம் கிடையாது என தமிழ்நாடு அரசு அறிவித்தது.

சென்னை, கிண்டி கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், 1,000 படுக்கைகளுடன் 240.54 கோடி செலவில் உலகத் தரத்தில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை.

திருவாரூர் மாவட்டம், காட்டூரில் புதிதாக கட்டப்பட்ட கலைஞர் கோட்டம் மற்றும் கலைஞரின் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது.

சென்னையில் நடந்த பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் நாள் விழாவில், கடலூர் மாவட்டம், பண்ருட்டி, காடம்புலியூரில் அமைக்கப்பட்டுள்ள முந்திரி பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமம் அமைக்கப்பட்டன.

மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனைகள் திறன் மேம்பாட்டுக்காக 6 மாவட்டங்களில் முதற்கட்டமாக பயிற்சி அரங்கங்கள் அமைக்கப்படும் என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

மதுரையில் ரூ.215 கோடி மதிப்பில் சர்வதேச தரத்தில் பிரமாண்டமான முறையில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

## புதுமைப்பெண் திட்டம்!

**அரசுப் பள்ளியில் படித்த மாணவிகளுக்கு உயர்கல்வி பயில மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 5.9.2022 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்!**

சட்டம் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் 'சத்தியதேவ் லா அகாடமி'யை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

ராணிப்பேட்டை சிப்காட் நிலை 3இல் திரவ மருத்துவ மற்றும் தொழில் ஆக்சிஜன், திரவ நைட்ரஜன், திரவ ஆர்கான் உற்பத்தியை மேற்கொள்வதற்காக அதிநவீன ஒருங்கிணைப்பு ஆலை அமைத்தார்.

எழும்பூர் மேயர் ராதாகிருஷ்ணன் அரங்கத்தில் ஹாக்கி விளையாட்டரங்கம், ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

கிழக்குக் கடற்கரை சாலை பேரூரில், ரூ.4,276 கோடியே 44 லட்சம் மதிப்பீட்டில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாடு முழுவதும் அரசுப் பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் 31,000 பள்ளிகளில் பயிலும் 17 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் விரிவுப்படுத்தப் பட்ட காலை உணவுத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருக்குவளையில் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்கு ஆண்டுக்கு 4 முறை மின் கட்டணச் சலுகை வழங்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு.



குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்ட தொடக்க விழா காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறக்கும் முன் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச் சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

சாலைகளில் ஏற்படும் இடர்ப்பாடுகள் குறித்து பொதுமக்கள் புகார் தெரிவிப்பதற்காக 'நம்ம சாலை' என்ற புதிய செயலியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கத்தை (டாஸ்கான் 2023) அமைச்சர் உதயநிதி ஸ்டா லின் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்தார்.

'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' திட்டத்தின்படி அனைத்து மாவட்ட கலெக்டர்களும், மாதத்தில் ஒரு நாள் முழுவதும் கிராமங்களில் தங்கி மக்களின் குறைகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு.

சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

## ஏழை எளியோருக்கு பட்டா!

**6 மாதங்களுக்குள் 6,29,000 ஏழை எளியோர்க்கு பட்டா வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது!**

மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட மக்களுக்கு ரூபாய் 6000 நிவாரண நிதி வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கோவையில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால், ரூபாய் 6000, ரூபாய் ஆயிரம் என்று அறிவிக்கப்பட்டு அம்மக்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டது.

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா - சிறப்பு மலர் வெளியீடு, முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆகியோர் பங்கேற்பு.

## தமிழ்ப்புதல்வன் திட்டம்!

**அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு உயர் கல்வி பயில மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோவையில் துவக்கி வைத்தார்!**

கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

உலக முதலீட்டாளர்கள் மாநாடுகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் முதலீடுகளை ஈர்க்க துபாய், ஸ்பெயின், அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று தொழில் முதலீடுகள் வர ஊக்கப்படுத்தினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு

மதுரையில் ரூ 44 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கித்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் அரசில் துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத் துறையானது பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகிறது. அதில் ஒன்று தான் சென்னையில் நடைபெற்ற யூத் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிஆகும். இந்தப் போட்டியில் தமிழகம் 38 தங்கம், 21 வெள்ளி, 39 வெண்கலம் பதக்கங்கள் பெற்று இரண்டாவது இடத்தை பிடித்தது .

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புதுப்பிக்கப் பட்ட கலைஞர் நினைவகம் திறந்து வைக்கப்பட்டது.

தூத்துக்குடி குலசேகரப்பட்டினத்தல் நாட்டின் 2 வது ராக்கெட் ஏவுதளத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையில் போட்டியிட்டதில் 39 தொகுதிகளிலும் வெற்றி பெற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனைகளுக்கு மக்கள் அங்கிகாரம் அளித்தனர். புதுச்சேரியிலும் இந்தியா கூட்டணியே வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

தி.மு.க. ஆட்சிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனைகளுக்கு மக்கள் அங்கீகாரம் கிடைக்கும் வகையில் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றது.

அரசு கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கம் தமிழ்ப் புதல்வன் திட்டம் தொடக்கம்

திருவண்ணாமலை, நாமக்கல், புதுக்கோட்டை, காரைக்குடி மாநகராட்சிகள் துவக்கம்

தொழிற்சாலைகளில் பணி புரியும் பெண்களுக்காக 18,720 படுக்கைகளுடன் கொணட தங்குமிடம் காஞ்சிபுரத்தல் திறப்பு.

## சமூக நீதி போராளிகள் மணிமண்டபம்!

**விழுப்புரம் வரத ராட்டியில் முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு நினைவகம் 21 சமூக போராளிகளுக்கு மணிமண்டபம் திறந்து வைத்து அவர்களின் தியாகத்தை போற்றினார் முதல்வர்!**

பவானி ஆற்றின் உபரி நீரை கோவை, திருப்பூர், ஈரோடு விவசாயத்துக்கு பயன்படுத்த அத்திக்கடவு அவினாசி திட்டம் துவக்கம்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங், முதல்வர் முன்னிலையில் வெளியிட்டார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னின்று நடத்திய தெற்காசியாவிலேய முதல் முறையாக சென்னையில் இரவு நேர சாலை ஃபார்முலா 4 கார் பந்தயத்தையும் ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 ஆகிய தேதிகள் நடைபெற்றது. இதுந்த ஃபார்முலா 4 கார் பந்தயப் போட்டி பலரால் பாராட்டப்பட்டது.



அமெரிக்காவில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை திருப்பியபோது செய்தியாளர்களிடத் தல7516 கோடி முதலீடுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான மக்களைத் தேடி மருத்துவ திட்டத்திற்கு ஐ.நா. விருது வழங்கி கௌரவித்தது.

## விடியல் பயணம்!

**முதல்வராகப் பொறுப்பேற்ற அன்றே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுப் பேருந்துகளில் மகளிர் இலவசமாக பயணம் செய்யும் வகையில் விடியல் பயணத் திட்டத்திற்கு கையெழுத்திட்டார். அன்று முதல் அரசு பேருந்துகளில் மகளிர் இலவசமாக பயணம் செய்து மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் மிச்சப் படுத்தி சேமித்து வருகின்றார் !**

அய்யன் திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் பாறை வரையிலான நடைப்பாலத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாவில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெண்களுக்கு பாதுகாப்பளிக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. மேலும் அதனை உறுதிபடுத்தும் வகையில் பாலியல் குற்றம் புரிவோருக்கு கடும் தண்டனை நிறைவேற்றும் வகையில் சட்டப்பேரவையில் புதிய சட்ட முன் வடிவு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் 1000 முதல்வர் மருந்தகங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

27.2.2025 அன்று கொளத்தூர் தொகுதி பெரியார் நகரில் ரூ.210 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பெரியார் அரசு மருத்துவமனையை மக்கள் பயன்பாட்டிற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்தார்.

**இப்படி திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனை பட்டியல் தொடருகிறது, தொடருகிறது, தொடர்ந்து கொண்டே இருக்கிறது. 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகும் இந்தச் சாதனைப் பட்டியல் தொடரும் ....அதற்கு சாட்சியே ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் வெற்றி! வாழ்க முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்...!**